நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2024

## இடைநிலை மத்திய பிரிவு (ஆண்டு 7 & 8)

## Mid Intermediate Level (Year 7 & 8)

வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள்

Time Given : 120 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

Aug 2024

**பின்வரும் 1 முதல் 5 வரையிலான வினாக்களில் கோடிட்ட சொற்களுக்குரிய ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க:**

**(மதிப்பெண்கள் 1 X 5 = 5)**

1. ஆகாயத்தில் ஆயிரக்கணக்கான <u>விண்மீன்கள்</u> கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.
   (அ) நட்சத்திரங்கள் (ஆ) நீலவானம் (இ) சந்திரன் (ஈ) மேகங்கள்

2. சொற்கள் சேர்ந்து <u>வாக்கியம்</u> ஆகும்.
   (அ) வசனம் (ஆ) பந்தி (இ) பாட்டு (ஈ) இலக்கியம்

3. வாசலில் உள்ள அழகான கோலத்தில் பல <u>வண்ணங்கள்</u> இருந்தன.
   (அ) வணக்கங்கள் (ஆ) வாழ்த்துக்கள் (இ) நிறங்கள் (ஈ) நன்மைகள்

4. நமக்குத் <u>தொழில்</u> கவிதை என்று பாரதி கூறினார்.
   (அ) நுட்பம் (ஆ) வேலை (இ) அறிவு (ஈ) பாட்டு

5. அவுஸ்திரேலியப் <u>பூர்வீகக் குடியினர்</u> தமிழருடன் பழமையான தொடர்பு உள்ளவர்.
   (அ) பழங் குடியினர் (ஆ) இளைய குடியினர்
   (இ) நவீன குடியினர் (ஈ) இன்றைய குடியினர்

**பின்வரும் 6 முதல் 10 வரையிலான வினாக்களில் கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதிய சொல்லைத் தெரிவு செய்க.**

**(மதிப்பெண்கள் 1 X 5 = 5)**

6. <u>வாரவிடுமுறை</u> வந்தால் எங்கள் வீட்டில் பாரம்பரிய உணவு சமைப்பார்கள்.
   (அ) வார் + விடுமுறை (ஆ) வா + விடுமுறை
   (இ) வாரம் + விடுமுறை (ஈ) வார + விடுமுறை

07. <u>விலையுயர்ந்த</u> ஆடைகள் எல்லாம் தரமானதாக இருக்குமா?
   (அ) விலை + யுயர்ந்த (ஆ) விலை + நுகர்ந்த
   (இ) விலை + உயர்ந்த (ஈ) விலையு + யர்ந்த

8. <u>பன்னீர்ப்பூக்கள்</u> அழகாகக் காட்சியளித்தன.
   (அ) பன் + பூக்கள் (ஆ) பன்னிரண்டு + பூக்கள்
   (இ) பன்னீர் + பூக்கள் (ஈ) பன்னீர்ப் + பூக்கள்

9) ஆசிரியர் மாணவர்களிடம் <u>குறிப்புப்புத்தகம்</u> கொண்டு வரும்படி கூறினார்.
   (அ) குறிப் + புத்தகம் (ஆ) குறிப்பு + புத்தகம்
   (இ) குறி + புத்தகம் (ஈ) குறிப்புப் + புத்தகம்

10) கமலாவின் வீட்டிற்கு அருகில் <u>ஆற்றங்கரை</u> இருந்தது.
   (அ) ஆற்றங் + கரை (ஆ) ஆற்றம் + கரை
   (இ) ஆறு + கரை (ஈ) ஆற்று + கரை

**பின்வரும் 11 முதல் 15 வரையிலான கேள்விகளுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**(மதிப்பெண்கள் 1 X 5 = 5)**

11. பனைக்கு வடலி போல தென்னைக்கு:

(அ) மரம் (ஆ) செடி

(இ) பிள்ளை (ஈ) குட்டி

12. மிகக் கவனமாய் பாதுகாத்தல் என்ற பொருளைத் தரும் சொற்தொடர்:

(அ) எலியும் பூனையும் போல (ஆ) கண்ணை இமை காப்பது போல

(இ) அடியற்ற மரம் போல (ஈ) கலங்கரை விளக்கம் போல

13. ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா:

(அ) வெள்ளிவிழா (ஆ) வைரவிழா

(இ) பொன்விழா (ஈ) நூற்றாண்டுவிழா

14. அன்பளிப்பு என்பது:

(அ) அன்புடன் அழைப்பது (ஆ) அறிவிப்பு

(இ) அன்புடன் அளிக்கும் பொருள் (ஈ) அறிந்து அளிக்கும் பொருள்

15. உணவே மருந்தாகும் என்பது:

(அ) மருந்து உற்பத்தி செய்தல் (ஆ) உணவால் நோய்களை கட்டுப்படுத்தல்

(இ) வைத்தியசாலையில் உணவு உண்ணல் (ஈ) மருந்து சாப்பிடுதல்

**பின்வரும் 16 முதல் 20 வரையிலான வினாக்களில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

**(மதிப்பெண்கள் 1 X 5 = 5)**

16. (அ) இன்பம் (ஆ) சந்தோசம் (இ) மகிழ்ச்சி (ஈ) துன்பம்

17. (அ) கோடை (ஆ) சூரியன் (இ) மாரி (ஈ) வசந்தம்

18. (அ) புதல்வன் (ஆ) குமரன் (இ) மந்திரி (ஈ) இளைஞன்

19. (அ) வாய்மை (ஆ) நேர்மை (இ) உண்மை (ஈ) வன்மம்

20. (அ) அப்பம் (ஆ) தேனீர் (இ) இட்டலி (ஈ) தோசை

**பின்வரும் 21 முதல் 25 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**(மதிப்பெண்கள் 1 X 5 = 5)**

21. ‘ஒற்றுமையே பலம்’ என்ற கருத்து அமையக் கூடிய பழமொழி

(அ) ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.

(ஆ) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

(இ) அறம் செய்ய விரும்பு.

(ஈ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

22. ‘நன்றி மறக்கக்கூடாது’ என்பதை உணர்த்தும் பழமொழி

(அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

(ஆ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

(இ) இளமையில் கல்வி சிலையில் எழுத்து

(ஈ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

23. ‘வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்’ என்பதன் பொருள் தரும் பழமொழி

(அ) கந்தையானாலும் கசக்கிக்கட்டு.

(ஆ) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.

(இ) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

(ஈ) வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு.

24. அறம் செய ....

(அ) வெறுப்பு (ஆ) நில் (இ) விரும்பு (ஈ) நட

25. மனதில் உறுதி ........

(அ) தேவையில்லை (ஆ) கடினம் (இ) கசக்கும் (ஈ) வேண்டும்

**பின்வரும் 26 முதல் 29 வரையிலான வினாக்களுக்கு வாக்கியங்களைச் சரியான ஒழுங்கில் இடம் பெறும் வகையில் நிரல்படுத்துக.**

**(மதிப்பெண்கள் 3 X 4 = 12)**

26. (அ) இறந்தாலும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

(ஆ) அவர் பல பாடல்களை எழுதியுள்ளார்.

(இ) அவர் எட்டயபுரத்தில் பிறந்தார்.

(ஈ) அனைத்துப் பாடல்களும் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

(உ) பாரதியார் ஒரு சிறந்த கவிஞர்.

(அ) உ, ஆ, இ, ஈ, அ (ஆ) ஆ, ஈ, அ, இ, உ

(இ) உ, அ, ஆ, இ, ஈ (ஈ) உ, இ, ஆ, ஈ, அ

27. (அ) நான் பின்பு வகுப்பறைக்குச் சென்றேன்.

(ஆ) நான் பாடம் படித்த பின்பு வீடு திரும்பினேன்.

(இ) நான் தமிழ்ப் பாடசாலைக்குச் சென்றேன்.

(ஈ) நான் சக மாணவர்களுடன் சேர்ந்து தமிழ் மொழி வாழ்த்துப் பாடினேன்.

(அ) ஆ, அ, இ, ஈ, (ஆ) ஈ, அ, ஆ, இ

(இ) இ ஈ, அ, ஆ (ஈ) இ, ஆ, ஈ, அ

28. (அ) தேனீர் பரிமாறிய பின் சமையல் செய்ய ஆரம்பித்தார்.
(ஆ) மாலையில் அம்மா வீட்டிற்கு வந்தார்.
(இ) சமையல் அறையில் தேனீர் தயார் செய்தார்.
(ஈ) வந்தவுடன் தனது கைப்பையை உரிய இடத்தில் வைத்தார்.
(உ) பின்பு, கைகளைக் கழுவி தேனீர் வேண்டுமா எனக் கேட்டார்.

(அ) ஆ, அ, இ, ஈ, உ
(ஆ) ஈ, அ, உ, ஆ, இ
(இ) ஆ, ஈ, உ, இ, அ
(ஈ) இ, உ, ஆ, ஈ, அ

29. (அ) எல்லாரும் காலை உணவு உண்ண வாருங்கள் என அழைத்தார்.
(ஆ) பல் துலக்கி, முகம் கழுவி காலை உணவு செய்தார்.
(இ) அப்பா காலையில் எழுந்தார்.
(ஈ) “உணவு உண்டு முடித்தவுடன் புறப்படுங்கள்” என்றார்.
(உ) பின்பு, எல்லாரும் அப்பாவுடன் புறப்பட்டோம்.

(அ) ஆ, அ, இ, ஈ, உ
(ஆ) ஈ, அ, ஆ, உ, இ
(இ) ஆ, ஈ, உ, இ, அ
(ஈ) இ, ஆ, அ, ஈ, உ

**30 முதல் 31 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட எழுத்துப் பிழையுள்ள சொற்களைத் திருத்தி எழுதுக.**
**(மதிப்பெண்கள் 1 X 2 = 2)**

அன்று முலு (30) நிலவு நாள். வானத்தை அண்ணாந்து பார்த்தேன். வின்மீன்கள் (31) கண்சிமிட்டிக் கொண்டு இருந்தன.

**பின்வரும் 32 முதல் 36 வரையிலான வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து எழுத்து வழக்குச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**
**(மதிப்பெண்கள் 1 X 5 = 5)**

32. நாங்கள் நாளைக்கு (பேசிறம் / பேசுவோம்) என்று கூறி தமது வீட்டிற்குச் சென்றனர்.

33. “நான் பூங்காவிற்கு (வந்துவிட்டேன் / வந்திட்டன்) நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?” என அண்ணன் கேட்டார்.

34. “(பார்த்து / பாத்து) மெல்ல படி ஏறுங்கள். உதவி எதுவும் வேண்டுமா?” என்றேன்.

35. நாளை (நடக்காட்டி / நடக்காவிட்டால்), இனி அடுத்த வருடம் தான் நடக்கும்.

36. கமலன் (நல்லா / நன்றாக) வீணை வாசிப்பான்.

37 முதல் 39 வரையுள்ள வினாக்களுக்கு தமிழ் வாக்கியங்களை ஆங்கிலத்திற்கும், ஆங்கில வாக்கியத்தை தமிழுக்கும் மொழிபெயர்த்து எழுதுக.

(மதிப்பெண்கள் 2 X 3 = 6)

37. எமது பாடசாலையில் ஒவ்வொரு வருடமும் கலைவிழா நடைபெறுகின்றது.

38. நான் ஞாயிற்று கிழமைகளில் உதைபந்தாட்டம் விளையாட மைதானத்திற்கு செல்வேன்.

39. We are not going to school today.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தை வாசித்து 40 முதல் 44 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

(மதிப்பெண்கள் 3 X 5 = 15)




40. எந்த மாநிலத்தில் மொய்விருந்து நடைபெற்றது?

41. எதற்காக மொய்விருந்து நடைபெற்றது?

42. எப்போது நடைபெற்றது?

43. எவ்வகையான சாப்பாடுகள் அங்கே வழங்கப்பட்டன?

44. எத்தனை மணியிலிருந்து இந்நிகழ்வு நடைபெற்றது?

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 45 முதல் 49 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**(மதிப்பெண்கள் 3 X 5 = 15)**

நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வேதனையால் அல்லல்ப்படும்போது அந்த வேதனையை மறக்கச்செய்ய இசை மிகவும் பயன்படுகிறது. மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், உணர்ச்சிவசப்பட்டவர்கள் ஆகியோருக்கு இசை மன அமைதியைத் தருகிறது. படிப்படியாக இத்தகைய நோய்களையும் இசை குணமாக்குகிறது. மருத்துவர் டொனால்டு என்பவர் இசை மருத்துவம் பற்றி எட்டு ஆண்டுகள் ஆய்வு செய்து தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் தெரிவித்திருக்கிறார். மது அருந்துதல், போதை தரும் பொருட்களைப் பயன்படுத்துதல் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமைப்பட்டவர்களையும் படிப்படியாகத் திருத்துவதத்திற்கும் இசை மருத்துவம் பயன்படுகிறது. இளம் குற்றவாளிகளைத் திருத்தவும், தீய வழிகளில் செல்லும் இளைஞர்களை சீர்திருத்தவும் இசை மருத்துவம் பயன்படுகிறது என்று அவர் தமது நூலில் தெரிவித்திருக்கிறார்.

45. இசையின் பயன்பாடுகள் என்ன?
46. இசைமருத்துவம் குறித்து ஆய்வு செய்தவர் யார்?
47. மன அமைதியைப் பெற என்ன செய்யலாம்?
48. மருத்துவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ள முக்கிய விடயங்கள் எவை?
49. இவ் உரைப்பகுதியை வாசித்தபின் உமது மனதில் எழும் உணர்வுகள் எவை?

50. கட்டுரை எழுதுதல்

**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

**(மதிப்பெண்கள் 20 X 1 = 20)**

(அ) நான் விரும்பும் வாழ்க்கை.

(ஆ) பூங்காக்களின் தேவை.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

இடைநிலை மத்திய பிரிவு
Mid Intermediate Level

சுட்டிலக்கம் :
Index Number :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அ | ஆ | இ | ஈ | 19. | அ | ஆ | இ | ஈ |
| 2. | அ | ஆ | இ | ஈ | 20. | அ | ஆ | இ | ஈ |
| 3. | அ | ஆ | இ | ஈ | 21. | அ | ஆ | இ | ஈ |
| 4. | அ | ஆ | இ | ஈ | 22. | அ | ஆ | இ | ஈ |
| 5. | அ | ஆ | இ | ஈ | 23. | அ | ஆ | இ | ஈ |
| 6. | அ | ஆ | இ | ஈ | 24. | அ | ஆ | இ | ஈ |
| 7. | அ | ஆ | இ | ஈ | 25. | அ | ஆ | இ | ஈ |
| 8. | அ | ஆ | இ | ஈ | 26. | அ | ஆ | இ | ஈ |
| 9. | அ | ஆ | இ | ஈ | 27. | அ | ஆ | இ | ஈ |
| 10. | அ | ஆ | இ | ஈ | 28. | அ | ஆ | இ | ஈ |
| 11. | அ | ஆ | இ | ஈ | 29. | அ | ஆ | இ | ஈ |
| 12. | அ | ஆ | இ | ஈ | 30. | | | | |
| 13. | அ | ஆ | இ | ஈ | 31. | | | | |
| 14. | அ | ஆ | இ | ஈ | 32. | | | | |
| 15. | அ | ஆ | இ | ஈ | 33. | | | | |
| 16. | அ | ஆ | இ | ஈ | 34. | | | | |
| 17. | அ | ஆ | இ | ஈ | 35. | | | | |
| 18. | அ | ஆ | இ | ஈ | 36. | | | | |

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

இடைநிலை மத்திய பிரிவு
**Mid Intermediate Level**

சுட்டிலக்கம் :
**Index Number :**

| | |
|---|---|
| **37.** | |
| **38.** | |
| **39.** | |
| **40.** | |
| **41.** | |
| **42.** | |
| **43.** | |
| **44.** | |
| **45.** | |
| **46.** | |
| **47.** | |
| **48.** | |
| **49.** | |

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

இடைநிலை மத்திய பிரிவு
Mid Intermediate Level

சுட்டிலக்கம் :
Index Number :

**50. கட்டுரை எழுதுதல்;**

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

இடைநிலை மத்திய பிரிவு
Mid Intermediate Level

சுட்டிலக்கம் :
Index Number :